# IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

MCOP.No.265/2018 Date: 30.01.2025.

PW2- வேல்முருகன்

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு 3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:

பள்ளி பதிவேடுகளின் படி இறந்து போன கௌதமன் என்பவரின் பிறந்த தேதி 20.03.1975. அவர் எங்கள் பள்ளியில் 10.07.1998ல் விளையாட்டு பயிற்சி ஆசிரியராக பணியில் சேர்ந்தார். அவரின் கல்வி தகுதி இளங்கலை பட்டம் வரலாறு மற்றும் விளையாட்டு பயிற்சி பெற்றிருந்தார். அவருடைய படிப்பு சான்றிதழ் சரிபார்க்கப்பட்டு பணியில் சேர்க்கப்பட்டார். இறந்து போனவருக்கான சம்பளம் அவரது வங்கி கணக்கில் மட்டும் தான் செலுத்தப்படும். இறந்து போன கௌதமனின் கடைசி மாத ஜீன் 2018ன் சம்பளம் கரூர் வைஸ்யா வங்கி மேட்டூர் கிளை கணக்கு எண்.1164178000002393 ல் பிடித்தம் போக ரூ.20,520/- செலுத்தப்பட்டது. ம.சா.ஆ.18ல் சம்பளம் செலுத்தப்பட்ட தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வங்கி கணக்குகளின் விவரமும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் இறந்து போன கௌதமனின் சம்பளத்தை மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. கௌதமனின் கல்வி சான்றிதழையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

Sd/-வேல்முருகன்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,

சார்பு நீதிபதி, சங்ககிரி.